**மழைநீர் சேமிப்போம்""** **பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் ""**

நகராட்சி அலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 08.10.2025

**நகர்மன்ற சாதாரண கூட்டம்**

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், புரட்டாசித் திங்கள் மாதம் 29-ம் நாள் 15.10.2025-ம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்டரங்கில் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(ஒம்).பா.ரேணுப்பிரியா,
நகர்மன்றத்தலைவர்,
தேனி-அல்லிநகரம் நகராட்சி.

**பொருள் 01:-**

தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேரூந்து நிலையத்தின் கிழக்குப் பக்கம் (நுண்ணுயிர் மையம் வடபுறம்) அமைக்கப்பட்டுள்ள 1) பூ கடைகள் தகரம் மேற்கூரை மற்றும் பக்கவாட்டு மறைப்புகள் தகரத்தினால் 43 எண்ணம் கடைகள், 2) நகராட்சி பகுதியில் உள்ள பலன் தரும் மரங்களின் குத்தகை உரிமம், 3) கர்னல் ஜான் பென்னிகுவிக் பேரூந்து நிலையத்தில் பேரூந்து நுழைவுக் கட்டணம் வசூல் உரிமம் மற்றும் 4) மெயின் பிளாக் தெற்குப் பகுதி இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை 5வது முறையாக பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்ய மக்கள் தொடர்பு அலுவலர், தேனி அவர்களுக்கு கடந்த 28.08.2025ஆம் தேதியன்று கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

அதன்படி மேற்காணும் 4 எண்ணங்கள் கொண்ட குத்தகை இனங்களை 5வது பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியினை, உரிய அரசின் வழிகாட்டுதலின்படியும், பொது ஏலக் கட்டுப்பாடு விதிகளின்படியும், நகராட்சியின் வருவாயினை பெருக்கும் நோக்கத்துடன் 5வது பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினமலர் செய்தித்தாளில் விளம்பரம் செய்யப்பட்டதன்பேரில் 05.09.2025ஆம் தேதிய பட்டியல் எண்.MD25410003ன்படி தொகைரூ.42,874/=ற்கான செலவினப்பட்டியல் வரப்பெற்றுள்ள விபரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு-**

மேற்காணும் செலவினத்தொகையினை 2025-26ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0606/2025/அ3)

**தீர்மான எண்**: 1135
**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 02:-**

இந்நகராட்சிக்குச் சொந்தமான மேற்குச் சந்தையில் 40 வருடங்களுக்கு மேல், பழுதடைந்த நிலையில் உள்ள 145 கடைகளை தமிழக அரசின் வெளியீட்டின்படி, கலைஞர் நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டதின்கீழ் அப்புறப்படுத்தப்பட்டு, புதியதாக 174 கடைகள் கட்டுவதற்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்காணும் இடத்தில் பழைய கடைகளில் F பிளாக் கடை எண்.2 மற்றும் 3யை திரு.ஜெ.சரவணன், த/பெ ஜெயராம் என்ற குத்தகைதாரருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நடத்தி வந்த நிலையில் புதிய கடைகள் கட்டும்பணி நடைபெறவிருக்கும் பட்சத்தில், கடந்த 01.04.2025ல் ஒப்படைக்கப்படுவதாக தமது விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்காணும் கடைகளுக்கு தலா ஒரு கடைக்கு ரூ.4,00,000/= வீதம் இரண்டு கடைகளுக்கும் ரூ.8,00,000/= யை கடை வாடகை நிலுவைத் தொகையினை ஈடு செய்தது போக மீதத் தொகையினை திரும்ப வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன்படி, மேற்காணும் இரண்டு கடைகளுக்கும் 2024-2025ஆம் ஆண்டுக்கு செலுத்தப்பட வேண்டிய கடை வாடகை நிலுவைத் தொகையான ரூ.1,01,376/=யை கழித்தது போக மீதத் தொகையான ரூ.6,98,624/=யை குத்தகைதாரர் திரு.ஜெ.சரவணன், த/பெ ஜெயராம் என்பவருக்கு வழங்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு-**

மேற்காணும் செலவினத்தொகையினை 2025-26ஆம் பொது நிதியின் கீழ் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1005/2025/அ3)

**தீர்மான எண்**: 1136

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 03:-**

தேனி அல்லிநகரம் நகராட்சியின் 2024-2025 ஆம் நிதியாண்டிற்கான நிர்வாக அறிக்கை (Administrative Report) மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்,
2. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2025/சி1)

**தீர்மான எண்**: 1137

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 04:-**

தேனி-அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்து முனையத்தில் ,நகராட்சி பராமரிப்பில் அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது.அம்மா உணவகத்திற்கு 2025-2026-ம் ஆம ஆணடிற்கு தேவையான மளிகை பொருட்கள் ,அரிசி,தயிர் ,எரிவாயு, காய்கறிகள் மற்றும் அம்மா உணவகத்தில் சுய உதவிக்குழு மூலம் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய மாதந்திர ஊதியம் ஆகியவற்றிற்கு ஆகும் வருடாந்திர உத்தேச செலவீனம் ரூ.30,00,000/-க்கு (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி அம்மா உணவகத்திற்கு செப்டம்பர் -2025ம் மாதம் வரை பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டதற்கான தொகை மற்றும் பணியாளர்களுக்குரிய மாதந்திர ஊதியம் வழங்கியதற்கான செலவீனங்கள் மேற்கொள்ளப்பட்டதனையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.949 /2025/சி1)

**தீர்மான எண்**: 1138

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 05:-**

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதி 2023 இன் படியும் ,அரசாணை எண் 10 இன் படி சிறப்பு நிலை நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் விவரங்கள் மற்றும் 2024-2025 ஆம் நிதியாண்டில் நிரப்பபட்ட மற்றும் காலி யாக உள்ள பணியிடங்களின் விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

**THENI ALLINAGARAM MUNICIPALITY**

**G.O 10. Spl Grade MUNICIPAL STAFF VACANCY DETAILS**

| Wing / Division / Section | Name of post | Appointment | Pay Level | GROUP | No. of posts | Posts filled | Posts vacant |
|---|---|---|---|---|---|---|---|
| GENERAL | MANAGER-(Class I) | Promotion | L-20 | B | 1 | 0 | 1 |
| | ACCOUNTANT-(Class IA) | Promotion | L-18 | B | 1 | 0 | 1 |
| | Jr.ASSISTANT | Direct & Promotion | L-08 | C | 10 | 8 | 2 |
| | TYPIST | Direct & Promotion | L-08 | C | 4 | 1 | 3 |
| | STENO TYPIST | Direct & Transfer | L-10 | C | 1 | 0 | 1 |
| | **Total** | | | | **17** | **9** | **8** |
| | REVENUE OFFICER | Direct & Promotion | **l-11** | **C** | **1** | **0** | **1** |
| | REVENUE ASSISTANT | Direct & Promotion | L-08 | C | 12 | 9 | 3 |
| | **Total** | | | | **13** | **9** | **4** |
| PUBLIC HEALTH | SANITARY INSPECTOR | Direct & Promotion | L-11 | C | 6 | 3 | 3 |
| | **Total** | | | | **6** | **3** | **3** |
| ENGINEERING | MUNICIPAL ENGINEER (EE GR) | Direct | L-25 | B | 1 | 0 | 1 |
| | ASST.ENGINEER/JE | Direct & Promotion | L-20 | B | 3 | 1 | 2 |
| | PUBLIC WORKS OVERSEAR | Direct & Promotion | L-11 | C | 3 | 1 | 2 |
| | DRAUGHTS MAN Gr-III | Direct & Promotion | L-11 | C | 1 | 0 | 1 |
| | WORK INSPECTOR | Direct | L-05 | C | 5 | 0 | 5 |
| | **Total** | | | | **13** | **2** | **11** |
| TOWN PLANING | SENIOR TPO | Promotion | L-25 | B | 1 | 0 | 1 |
| | TOWN PLANING INSPECTOR | Direct & Promotion | L-11 | C | 3 | 1 | 2 |
| | **Total** | | | | **4** | **1** | **3** |
| | **Grand Total** | | | | **53** | **24** | **29** |

| Abstract | | No. of posts | Posts filled | Posts vacant |
|---|---|---|---|---|
| General Section | | 17 | 9 | 8 |
| Revenue Section | | 13 | 9 | 4 |
| Public Health Section | | 6 | 3 | 3 |
| Engineering Section | | 13 | 2 | 11 |
| Town Planing Section | | 4 | 1 | 3 |
| **Grand Total** | | **53** | **24** | **29** |

**அலுவலககுறிப்பு**-

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்,
2. மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்: / 2025/சி1

**தீர்மான எண்**: 1139

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 06**:-

தேனி-அல்லிநகரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கசடு கழிவு மேலாண்மை துணை விதிகள் (திருத்தம்) 2024 மன்றத்தின் பார்வைக்கும், தேனி-அல்லிந்நகரம் நகராட்சி 1 முதல் 33 வரையுள்ள வார்டுகளில் செயல்படுத்தவும், மாவட்ட அரசு இதழில் வெளியிடு செய்வதற்கும் அதனை தினசரி நாளிதழ் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) விளம்பரம் செய்வதர்க்கு உண்டான செலவினம் ரூ.44,790/- மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | Kal Publications Private Limited | .. | Rs. 9720- |
| 2. | ESS , ESS Publication | .. | Rs.19950- |
| 3. | Trinity Printer | .. | Rs. 15120- |
| | Total | .. | Rs.44790/- |

ந.க.எண்.1599/H1/2025

**அலுவலக குறிப்பு**:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வருவாய் மற்றும் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.
(ந..எண்.1599/2025/எச்1)

**தீர்மான எண்**: 1140

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 07:-**

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் பணிபுரியும் தகுதிவாய்ந்த சீருடை பணியாளர்களுக்கு 2025 -2026ஆம் ஆண்டின் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பணியாளர்களுக்கு சீருடை வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.1,50,000/- (ஒரு இலட்சத்தி ஐம்பதாயிரம்) ற்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு::**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (**ந.க.எண்.** 2560/2022/**எச் -1**

**தீர்மான எண்**: 1141

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 08:-**

தேனி-அல்லிநகரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வார்டு எண் 1 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு சட்டம் 1998, விதிகள் 2023ன்படி நகராட்சி எல்லைக்குள் வர்த்தகம் மற்றும் வணிகம் செய்யும் நிறுவனங்களுக்கு தொழில் உரிமம் கட்டணம் நிர்ணயம் செய்த விபரங்களை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய பக்கம் ஒன்றிற்கு ரூ.3000/-வீதம் 24 பக்கங்களுக்கு 24X3000=ரூ 72.000/- இ செல்லான் (e- chellan) மூலம் செலுத்தியதர்க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.3060/2024/எச்1

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வருவாய் மற்றும் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.3060/2024/எச்1)

**தீர்மான எண்**: 1142

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 09:-**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னைஅவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண் 21787 / 2021 / EA2 நாள் 02.10.2021ன் படி தேனி அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 1 முதல் 33 வார்டுகளில் உள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளான தினசரி வீடுதோறும் முதல் நிலை குப்பை சேகரம் செய்தல் குப்பைகளை மக்கும் குப்பை மக்காத குப்பை என தரம் பிரித்து சேகரம் செய்தல், பேருந்து நிலையம் பராமரித்தல், சந்தை பராமரித்தல், தெருக்களை கூட்டுதல் வாகனங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளை ஒப்பந்தத்தின் படி மூன்று வருட காலத்திற்கு நிர்ணயம் செய்து தனியார் நிறுவனம் சேவை வழங்குபவர்கள் / ஒப்பந்ததரர்கள் மூலம்

பணிகள் மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்த புள்ளி 24.03.2023 நாளன்று கோரியதில் Raam & co, மதுரை நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட குறைந்த விலை விகிதம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பணி உத்தரவு ந.க.எண் 3097/2023 எச்1, நாள் 12.05.2023 படி வேலை உத்தரவு வழங்கி 01.06.2023 மற்றும் இதே எண்ணிட்ட உத்தரவு 13,01,2025ம் தேதி Raam & co மதுரை நிறுவனம் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி தனியார் நிறுவனம் மூலம் குப்பைகளை தினசரி முறையாக சேகரிக்கப்படவில்லை என்றும் தெருக்களில் குப்பைகள் தேங்கியுள்ளதாகவும் பழைய மற்றும் புதிய பேருந்து நிலைய பகுதிகளில் குறிப்பட்ட விதத்தில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளவில்லை என்றும் தினசரி மார்க்கெட் பகுதிகளில் முழுமையாக தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என தொடர்ந்து பாராளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர், மாவட்டஆட்சியர், மாவட்ட சுற்றுச் சுழல் அலுவலர்கள், பத்திரிக்கையாளர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், பொது மக்களால் புகார் அளிக்கப்பட்டு வருவதால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட்டு வருகிறது.

மேலும் முதல் நிலை சேகரிப்பு வாகனங்களான BOV, Pushcart மற்றும் LCV வாகனங்களில் குப்பைகளை பிரித்து வாங்குவதற்கு தொட்டிகள் வழங்காமல் உள்ளதால் குப்பைகளை பிரித்து வாங்க முடியவில்லை.பயோமெட்ரிக் (BioMetric) வருகைப் பதிவு முறையை கடைபிடிக்காமலும் ஒப்பந்தப்படி பணிக்கு தேவையான எண்ணிக்கையில் பணியாளர்களை பணிக்கு அமர்த்தப்படாமல் உள்ளதால் திடக்கழிவு மேலாண்மை பணிகள் முழுமையாக செயல்படுத்தப்படுவதில் தொடர்ந்து சுணக்கம் ஏற்படுகிறது என்பது தினசரி ஆய்வில் கண்டறியப்படுகிறது. வாகன பழுதுகள் அவ்வப்போது உடனுக்குடன் பழுது நீக்கப்பணிகள் செய்யாமல் உள்ளதால் வாகனங்கள் முற்றிலுமாக பழுதாகிவிடும் சூழல் ஏற்படுவதாலும், வாகன காப்பீடு தகுதி சான்றிதழ் பெறாமல் காலம் தாழ்த்துவதற்கு வாகனங்கள் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும் அபாயம் உள்ளது.

செயல்திறன் வழிகாட்டு நெறிமுறைகளை (KPI) பின்பற்றப்படாமல் விதிகளுக்கு எதிராக செயல்படுவதை சரி செய்ய அறிவுறுத்தி பலமுறை அறிவிப்பு வழங்கப்பட்டதோடு குறைபாடுகளை சரிசெய்யாத பட்சத்தில் பணி ஒப்பந்தம் ரத்து செய்யப்படும் என 15 முறை அறிவிப்பும் Raam & co, மதுரை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை மேற்படி குறைபாடுகளை சரிசெய்யாமல் அலட்சியமாக இருப்பதோடு எவ்விதமான எழுத்துப்பூர்வமான விளக்கமும் அளிக்கப்படவில்லை.கடந்த 29.09.2025 அன்று இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டும் ராம் & கோ தனியார் நிறுவனத்திடமிருந்து நேரிலோ அல்லது எழுத்து பூர்வமாகவோ பதில் ஏதும் பெறப்படவில்லை.

கடந்த 30.09.2025 அன்று நடந்த மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் திடக்கழிவு மேலாண்மை மேற்கொள்ளும் ராம் & நிறுவனத்தின் பணி உத்திரவை இரத்து செய்ய இந்நகராட்சியின் நகர்மன்ற தலைவர் அவர்களிடம் நகர் மன்ற கூட்டத்தில் தீர்மானம் இயற்றி நடவடிக்கை மேற்கொள்ள வலியுறித்தினார். கூட்டத்தில் கலந்து கொண்ட நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர்(பொ), நகர் நல அலுவலர் அவர்களையும் இந்நிறுவனத்தின் ஒப்பந்தத்தை இரத்து செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

மேலும் 30.09.2025 தேதியுடன் ராம் & கோ, மதுரை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு முடிவடைவதாலும் மேற்குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் ஏதும் சரிச் செய்யப்படாமல் நகராட்சிக்கும் அவப்பெயர் உண்டாக்கும் நோக்கத்திலும் சுகாதார சீர்கேடு விளைவித்து வரும் ராம் & கோ நிறுவனத்தின் பணி உத்திரவை ரத்து செய்து புதியதாக ஒப்பந்த புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் புதிதாக ஒப்பந்த புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கும் வரை உள்ள காலங்களுக்கு Raam & co நிறுவனம் பணி மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. பத்திரிக்கை அறிவிப்பு செய்து புதியதாக ஒப்பந்த புள்ளி கோரி மேற்கூறப்பட்ட பணிக்கான செலவின தொகையினை இந்நகராட்சி வருவாய் 15 CFC/SUC நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண் 3097/2022 / எச்1)

**தீர்மான எண்**: 1143
**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 10:**-

தேனிNT அல்லிநகரம் நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் எண்-.60.AK-7542க்கு 21-6-2025 அன்றுடனும் TN 60-P-4546, TN 60 J-5757 க்கு 9-07-2025 அன்றுடனும் மற்றும் TN60AK2112 க்கு 14-8-2025 அன்றுடன் காப்பீட்டு உரிமம் முடிவடைவதால்காப்பீட்டு உரிமத்தினை.

. மேலும் ஓராண்டிற்கு புதுப்பிக்க வேண்டியுள்ளதுமேற்படி வாகனம் காப்பீட்டு உரிமம் புதுப்பித்த பின்னரே இயக்க முடியும் என்பதால் இப்பணியினை OC ECNARUSNI LADNEIRO EHT.dtL. மூலம் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தொகை. ரூ.1,09,197/--ஐ நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்) .ந.எண்.க.1832/2021(2இ/

**தீர்மான எண்**: 1144
**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 11:-**

தேனி-அல்லிநகரம் நகராட்சியில் பொது நிதியில் கீழ்காணும் விபரப்படியான பணி மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | வேலையின் பெயர் | பணிக்கான மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரி தொகை GST வரிகள் நீங்கலாக (மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு) |
|---|---|---|---|---|
| 1 | கருவேல்நாயக்கன்பட்டிமுதல்பொம்மையகவுடன்பட்டிவரைஉள்ள 80 WattsCenter Median விளக்குகளை 120 WattsCenter Median விளக்குகளாகமாற்றும்பணி | 9.00 | திரு. தாமரைக்கண்ணன் நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி. | ரூ.712560.00 0.75% குறைவு |
| | | | திரு.விவிட்ரேடர்ஸ், நகராட்சி ஒப்பந்ததாரர், | ரூ.742080.00 3.36% அதிகம் |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டினை காட்டிலும் (0.75%) குறைவாகஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.தாமரைக்கண்ணன், தேனி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவினத்தை நகராட்சிபொது நிதி இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நக.எண். 1324/2025/இ2**

**தீர்மான எண்**: 1145

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 12:-**

தேனி-அல்லிநகரம் நகராட்சியில் பொது நிதியில் கீழ்காணும் விபரப்படியான பணி மேற்கொள்ளுவதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | வேலையின் பெயர் | பணிக்கான மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி கோரியதொகை GST வரிகள் நீங்கலாக |
|---|---|---|---|---|
| 1 | தேனிஅல்லிநகரம்நகராட்சிக்கு உட்பட்டபெரியகுளம்மதுரை சாலையில்உள்ளமின்விளக்குகள் மற்றும்மின்கம்பங்கள்அகற்றும் பணி | 0.60 | திரு. தாமரைக்கண்ணன் நகராட்சி ஒப்பந்ததாரர், | ரூ.69620.00 |
| | | | திரு.விவிட்ரேடர்ஸ், நகராட்சி ஒப்பந்ததாரர் | ரூ.64900.00 |
| | | | திரு.KLUGHT பிரைவேட்லிமிடெட் நகராட்சி ஒப்பந்ததாரர், | ரூ.59660.00 |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளுக்கான ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டினை காட்டிலும் குறைவாகஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.KLUGHT பிரைவேட்லிமிடெட், என்ற ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ) வரப்பெற்றவிலைப்புள்ளிகளில்குறைந்தவிலைப்புள்ளிகோரிஉள்ள M/S KLUGHT பிரைவேட்லிமிடெட்விலைபுள்ளியினைஏற்கலாம்

ஆ) அவசரம்அவசியம்கருதிவேலைஉத்தரவுவழங்கியதைமன்றம்அனுமதிக்கலாம்

**ந.க.எண்:23/2025/இ2**

**தீர்மான எண்**: 1146

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 13:-**

தேனி-அல்லிநகரம் நகராட்சியில் குடிநீர்மற்றும்புதைவடிகால் நிதியில் கீழ்காணும் விபரப்படியான பணி மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததரார்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | வேலையின் பெயர் | பணிக்கான மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரி தொகை GST வரிகள் நீங்கலாக (மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு) |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Fixing of In flow meter in Raw sewage water pipe at seavage treatment plant in Thenialinagar municipality | 1.30 | திரு. T.தவமணி நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி. | ரூ.108590.00 0.09% குறைவு |
| | | | திரு.வைகைஹைட் ராலிக்இன்ஜினியரிங், தேனி. | ரூ.109309.00 |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டினை காட்டிலும் (0.09%) குறைவாகஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.T.தவமணி, தேனி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவினத்தை நகராட்சிகுடிநீர்மற்றும்புதைவடிகால் நிதி இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(நக.எண். 2030/2025/இ1)**

**தீர்மான எண்**: 1147
**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 14</u>:-**

தேனி-அல்லிநகரம் நகராட்சியில் குடிநீர்மற்றும்புதைவடிகால் நிதியில் கீழ்காணும் விபரப்படியான பணி மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததரார்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | வேலையின் பெயர் | பணிக்கான மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரி தொகை GST வரிகள் நீங்கலாக (மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு) |
|---|---|---|---|---|
| 1 | Repair and Maintenance of 10 HP non clock motor NO:1 and 2 at forest road 1st Street sub pumping station in TAMC | 6.10 | திரு. T.தவமணி நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி. | ரூ.511199.00 0.03% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திரு.வைகைஹைட் ராலிக்இன்ஜினியரிங், தேனி. | ரூ.512041.00 |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டினை காட்டிலும் (0.03%) குறைவாகஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.T.தவமணி, தேனி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் புதைவடிகால் நிதி இருந்து மேற்கொள்ள மன்றம்அனுமதிக்கலாம்.

**(நக.எண். 2029/2025/இ1)**

**தீர்மான எண்**: 1148
**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 15:-</u>**

தேனி-அல்லிநகரம் நகராட்சியில் குடிநீர்மற்றும்புதைவடிகால் நிதியில் கீழ்காணும் விபரப்படியான பணி மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததரார்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | வேலையின் பெயர் | பணிக்கான மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரி தொகை GST வரிகள் நீங்கலாக (மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு) |
|---|---|---|---|---|
| 1 | Repair and Replacement of 20 HP recycle pump No:2, fine screen hydraulic pump and panel board and 60 HP outlet motor power cable 75 HP panel board at Bangalowmedu main pumps house and non return valve in sewage treatment plant in karuvelnayakkanpatti in TAMC | 9.70 | திரு. T.தவமணி நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி. | ரூ.813081.00 0.03% குறைவு |
| | | | திரு.வைகைஹைட் ராலிக்இன்ஜினியரிங், தேனி. | ரூ.814012.00 |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டினை காட்டிலும் (0.03%) குறைவாகஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.T.தவமணி, தேனி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் புதைவடிகால் நிதி இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(நக.எண். 2031/2025/இ1)**

**தீர்மான எண்**: 1149

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 16</u>:-**

தேனி-அல்லிநகரம் நகராட்சியில் வைப்பு நிதியில் கீழ்காணும் விபரப்படியான பணி மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | வேலையின் பெயர் | பணிக்கான மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரி தொகை GST வரிகள் நீங்கலாக (மதிப்பீட்டைவிட கூடுதல்/குறைவு) |
|---|---|---|---|---|
| 1 | பொட்டல்களம்பகுதியில்476 குடியிருப்புகளுக்கு 20 Watts 90 LED தெருவிளக்குகள்அமைக்கும்பணி | 7.20 | திரு. தாமரைக்கண்ணன் நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி. | ரூ.590412.00 0.07% குறைவு |
| | | | திரு.விவிட்ரேடர்ஸ், நகராட்சி ஒப்பந்ததாரர், | ரூ.608268.00 2.55% அதிகம் |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்புநோக்கு பட்டியல் தனித்தனியாக தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டினை காட்டிலும் (0.07%) குறைவாகஒப்பந்தப்புள்ளி கோரிய திரு .தாமரைக்கண்ணன், தேனி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவினத்தை நகராட்சிவைப்பு நிதி இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(நக.எண். 5282/2025/இ2)**

**தீர்மான எண்**: 1150
**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 17:-</u>**

தேனி –அல்லிநகரம் நகராட்சி பகுதியில் 17.07.2025 முதல் நடைபெற இருக்கும் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்திற்கு தேவையான பொருட்களை விநியோகம் செய்வதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்கள்

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர் / முகவரி** | **விலைப்புள்ளிவிபரம் (ஒரு முகாமிற்கு)** |
|---|---|---|
| 1. | S.K.சாமியானம் பந்தல் நிலையம், கருவேல்நாயக்கன்பட்டி, தேனி | ரூ.74309/- |
| 2. | சூர்யா சாமியானம் , வைகைரோடு க.விலக்கு, தேனி | ரூ.74017/- |
| 3. | T.தவமணி, ஒப்பந்ததாரர், திருமலாபுரம் , தேனி | ரூ.67653/- |

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களின் வரிசை எண்.3 இல் உள்ள திரு. T.தவமணி, ஒப்பந்ததாரர், திருமலாபுரம் , தேனி அவர்கள் குறைந்த விலைப்புள்ளி கோரியதின் அடிப்படையில் அன்னாருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1728/2025/எப்.1)

**தீர்மான எண்**: 1151
**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 18:-</u>**

தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு –D . பிளாக்-13 , நகரளவு எண்கள்.18 மற்றும் 27, பழைய சர்வே எண்கள். 1279/3 ,1742/1 , 2297/1 , 1729/4, 1743 மற்றும் 1742 /5 பகுதியில் கட்டுப்பட்டுள்ள வாரச்சந்தையில் பழுதடைந்த கட்டிடங்களை இடித்துவிட்டு, புதிய கடைகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி கடைகளுக்கு நகர் ஊரமைப்பு துறையின் மூலம் கட்டிட அனுமதி பெறுவதற்கு பதிவு பெற்ற கட்டிட வரைபட வரைவாளர் மற்றும் Registered Architecht ஆகியோர் மூலம் Total Station சர்வே செய்தும் Auto

Cadd வரைபடம் தயார் செய்தும், ஆன்லைனில் பதிவேற்றம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/- (ஒரு இலட்சம்) பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண்..3691/2025/எப் 1)

**தீர்மான எண்**: 1152
**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 19</u>:-**

தேனி-அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்-1 முதல் 33 வரை , மழைநீர் வடிகாலுக்கு மேல் ஏற்படுத்தப்பட்டுள்ள மாடிப்படிக்கட்டுகள் மற்றும் சாலையின் இருபுறங்களிலும் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுகின்ற வகையிலும் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக ஆக்கிரமிப்புகளான தகர செட்டுகள், படிக்கட்டுகள் மற்றும் Ramp போன்றவற்றை அகற்றக்கோரி பல்வேறு புகார் மனுக்கள் இந்நகராட்சியில் வந்த வண்ணம் உள்ளன. எனவே மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு பிரேக்கர், JCB வாகனம் மற்றும் டிராக்டர் போன்றவை தேவைப்படுவதால் 2025-2026 ம் நிதி ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.0 இலட்சம் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு::**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3128/2024/எப்1)

**தீர்மான எண்**: 1153
**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 20</u>:-**

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு எதிராக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உயர்நீதி மன்றம் மற்றும் உச்ச நீதி மன்றங்களில் பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்படுகிறது. மேற்படி வழக்குகளுக்கு எதிர்வாதுரை தாக்கல் செய்து நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தி கொடுக்க (நகராட்சியால் நியமிக்கப்பட்ட) வழக்கறிஞர்களுக்கு 2025 - 2026 ம் நிதி ஆண்டுக்குரிய உத்தேச செலவினத்தொகை ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் ) பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு::**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (**ந.க.எண்**.1686/2024/எப் -**1)**

**தீர்மான எண்**: 1154

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 21:-**

## சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள்(By-Law), 2018

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) 37வது பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015-ன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது.

மதுரை மாநகராட்சி சட்டம், 1971 அத்தியாயம் 15 பிரிவு 433 / கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம், 1981 அத்தியாயம் 15 பிரிவு 432 / தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 அத்தியாம் 14 பிரிவு 306 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும், அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டும், மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுங்குப்படுத்தவும், மாநகராட்சி / நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 ஏற்படுத்தப்படுகின்றது.

### அத்தியாயம்-1

### முதனிலை

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.- இந்த துணை விதிகள் தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 என்றழைக்கப்படும்.
   - இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்
2. பொருள் வரையறைகள்.- இந்த துணை விதிகளில், உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை :
   - i. "சட்டம்" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) என்று பொருள்படும்.
   - ii. "விற்பனை திட்டம்" என்பது சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைபடம் என்று பொருள்படும்.

iii. "விதிகள்" என்பது தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விப்னை ஒழுங்குமுறை) விதிகள், 2015 என்று பொருள்படும்.

iv. "திட்டம்" என்பது சட்டத்தின் 38 வது பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல், 2015 என்று பொருள்படும்.

v. "நகர விற்பனை குழு" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனைக் குழு என்று பொருள்படும்.

சட்டம் விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும் வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம், விதிகள் அல்லது சட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.

## அத்தியாயம்-2

## விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுங்கு முறைகள்

3.

1. பாத சாரிகளின் நடமாட்டம் (Foot fall) மற்றும் சாலையின் அகலம், வாகனம் மற்றும் பாதசாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டுவிற்பனை மண்டலங்களை நகர விற்பனை குழு முடிவு செய்யும்
2. ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின், எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து தேனி அல்லிநகரம் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிப்பார்க்கப்பட வேண்டும்.
3. சாலையின் அகலத்தை கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்காணும் விவரங்களைக் கொண்டும் இத்திட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்ட விற்பனை மண்டலங்களை விவரிக்கப்பட வேண்டும்.

   i. இரு வழி போக்குவரத்து கொண்ட 6 மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில், நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனங்கள் அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால், அச்சாலையில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

   ii. 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால், சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

   iii. 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை அகலமான சாலைகளில், சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

   iv. 10 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில், சாலையில் இரு புறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

v. ஒரு சாலையில் விற்பனை அனுமதிக்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

vi. சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும் தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்.

vii. வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.

viii. சாலை வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. சாலையோர விற்பனை தடைச் செய்யப்பட்ட மண்டலங்களிள்,

i. அரசு கட்டிடங்கள், உயர்நீதி மன்றம், பிற நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மாவட்ட ஊராட்சி / மாநகராட்சி / நகராட்சி அலுவலகங்கள், தீயணைப்பு நிலையங்கள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கும்,

ii. இரயில் நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

iii. நகர எல்லைக்குட்பட்ட இரயில் கடவுப்பாதையின இரு பக்கங்களிலும் 30 மீட்டர் நீளத்திற்கும்,

iv. பேருந்து நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

v. பண்டைய நினைவுச்சின்னஙகள் மற்றும் தொல்பொருளியல் தளங்கள் மற்றும் அகழ்வுகள் சட்டம், 2010ன்கீழ் அறிவிக்கப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.

vi. மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்

vii. இரண்டு அல்லது அதிகமான சாலைகள் குறிப்பிட்ட இடங்களில் அனைத்து பக்கங்களில் 30 மீட்டர் நீளத்திற்கு

viii. 'எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேரும் வாயிலிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு.

ix. பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்

x. நகர விற்பனைக் குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து, அத்தகைய இடங்களில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

**குறிப்பு-** கணக்கெடுப்பின்போது அறியப்பட்ட எந்தஒரு அங்காடியையோ அல்லது இயற்கையாக அமைய பெற்ற அங்காடியையோ, விற்பனை தடை செய்யப்பட்ட பகுதியில் இணைக்கக்கூடாது.

5. சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு.- எந்த ஒரு விற்பனை மண்டலத்திலும், விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்:

i. வாகன போக்குவரத்து, மிதி வண்டி மற்றும் பாதசாரி நடமாற்றத்திற்கு தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

ii. கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு முட்டுகொடுத்து தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது.

iii. குடிநீர் வழங்கல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கும் தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது.

iv. சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ, வழிகாட்டு பலகைகள், அறிவிப்பு பலகைகள், நகர வேலைகள் அல்லது நடவடிக்கைகளுக்கோ தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது.

v. ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது.

vi. நகர விற்பனைக் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது.

vii. நகர விற்பனைக் குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணிகம் செய்வதோ கூடாது,

viii. உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர, இதர இடங்களில் திடக்கழிவுகளை கொட்டக்கூடாது.

விற்பனை சான்றிதழ் காலாவதியாகிய பின்னர் பொருட்களையோ அல்லது சேவைகளையோ அல்லது விற்பனையோ செய்யக்கூடாது.

ix. ஒலி பெருக்கிகள், மெகா போன்கள், ஒலி அமைப்புகள் அல்லது பிற ஒலி பெருக்கி உபகரணங்கள் மற்றும் பிரதிபலிப்பு விளம்பரங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தக் கூடாது.

6. சாலையோர வியாபாரிகளின் பொறுப்பு, சாலையோ வியாபாரிகள் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரின் கடமைகள்,

i. விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

ii. விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மட்டும் விற்பனை செய்யப்படவேண்டும்,

iii. விற்பனை செய்யும் இடத்தில் விற்பனை சான்றிதழ் காட்சிக்கு எப்பொழுதும் வைக்கப்பட வேண்டும்,

iv. விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர விற்பனையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் அல்லது அவரின் பணியாளர் விற்பனை இடத்தில் விற்பனை செய்யும்போது இருக்க வேண்டும்.

v. எப்பொழுதும் விற்பனை இடத்தினை பாதுகாப்பாகவும், நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்.

vi. உள்ளாட்சி அமைப்பின் தேவைக்கேற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

vii. உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954 அல்லது இதர விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்.

viii. நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016யை கடைப்பிடிக்க வேண்டும்,

ix. நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

x. தகுதியுடைய அலுவலர் கோரும்போது விற்பனை சான்றிதழ் காண்பிக்க வேண்டும்,

மற்றும்

xi. இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

## அத்தியாயம்-3

## கட்டணங்கள், வரிகள் மற்றும் அபராதங்கள்

7. விற்பனை கட்டணம்,- (1) சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும்.

(2) உப விதி (1)-இன் படியான விற்பனை கட்டணம் கீழ்காணும் பட்டியலின் படியாகும்

| வ. எண் | சாலையோர விற்பானையாளரின் வகை | பரப்பளவு | விற்பனை கட்டணம் |
|---|---|---|---|
| 1 | நிலையான விற்பானையாளர் (முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் - வருடத்திற்கு ரூ.750/-க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 ச.அடி வரை | வழிகாட்டி மதிப்பில் 2 சதவீதம் - வருடத்திற்கு ரூ.1500/-க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வழிகாட்டி மதிப்பில் 3 சதவீதம் - வருடத்திற்கு ரூ.3500/-க்கு குறையாமல் |
| 2 | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு | 10 ச.அடி வரை | வழிகாட்டி மதிப்பில் 0.5 சதவீதம் - வருடத்திற்கு ரூ.375/-க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 ச.அடி வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் - வருடத்திற்கு ரூ.750/-க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிக்கு மேல் | வழிகாட்டி மதிப்பில் 1.5 சதவீதம் - வருடத்திற்கு ரூ.1500/-க்கு குறையாமல் |
| 3 | நடமாடும் விற்பனையாளர் (மோட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 ச.அடி வரை | வருடத்திற்கு ரூ.750/- |
| | | 10 முதல் 25 ச.அடி வரை | வருடத்திற்கு ரூ.1500/ |
| | | 25 சதுர அடிக்கு மேல் | வருடத்திற்கு ரூ.3000/ |
| 4 | நடமாடும் விற்பனையாளர் (மோட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 ச.அடி வரை | வருடத்திற்கு ரூ.375/- |
| | | 10 முதல் 25 ச.அடி வரை | வருடத்திற்கு ரூ.750/ |
| | | 25 சதுர அடிக்கு மேல் | வருடத்திற்கு ரூ.1500/ |
| 5 | நடமாடும் விற்பனையாளர் தலைசுமை | ------ | வருடத்திற்கு ரூ.250/- |

(3) மூன்று வருடங்களுக்கு ஒரு முறை விற்பனை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு , உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

8. **பராமரிப்புகட்டணம்**

i. சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அங்காடியின்தகுதியின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்பால் செய்யப்பட்டுள்ள குடிமை நலன்கள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சாலையோர விற்பனையாளர்கள் மற்றும் அங்காடி வகைகள் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்படும்.

2. உப விதி (1)யில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணம் மாதத்திற்கு /அரையாண்டிற்கு / ஆண்டிற்கு ரூ. ( * ) /-க்கு குறையாமலும், ரூ. ( * ) /-க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

3. பராமரிப்பு கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் உயர்த்தப்பட வேண்டும். (*)சதவீதம்

( (*) மாநகராட்சி / நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளின்படி முடிவு செய்யப்பட வேண்டும்.)

9. அபராதம் விதித்தல்,- எந்தவொரு சாலையோர விற்பனையாளரும்,

i. விற்பனை சான்றிதழ்படி, மாற்று இடத்திற்கு செல்ல அல்லது காலி செய்ய தவறும்பட்சத்தில், அல்லது

ii. விற்பனை சான்றிதழ் இல்லாமல் விற்பனை செயலில் ஈடுபட்டாலோ, விற்பனை சான்று மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறை சட்ட பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் திட்டத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்போது, மாதாந்திர கட்டணத்தில் (மூன்று) மடங்காக அபராதம் செலுத்தப்பட வேண்டும்.

iii. விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சாலையோர விற்பனைபாளர் மூன்று முறைகள் மீறினால் அவரின் விற்பனை சான்று இடைநீக்கம் செய்யப்படும். நான்காவது முறையாக விதிமுறைகளை மீறினால் அவரின் விற்பனை சான்று ரத்து செய்யப்படும்.

## அத்தியாயம்-4

## பலவகை

10. விற்பனை மண்டலத்தில் போக்குவரத்தினை ஒழுங்குமுறை படுத்துதல்.- (1) நகர விற்பனை குழுவால் அறிவிக்கப்பட்ட விற்பனை மண்டலங்களில், ஒரு வழி வாகன போக்குவரத்து, வேக கட்டுப்பாடு, வாகன நிறுத்தம், கனரக வாகனங்கள் இயக்கம் மற்றும் இது குறித்த இதர பொருள்கள் குறித்து போக்குவரத்து காவல்துறையால் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் விற்பனை மண்டலம் அமைப்பது குறித்து போக்குவரத்து காவல்துறையால் அங்கீகரிக்கப்படவில்லையெனில், அந்த விற்பனை மண்டலத்தினை மாற்றியமைப்பது குறித்தோ அல்லது விற்பனை மண்டலத்தினை ரத்து செய்வது குறித்தோ நகர விற்பனைக் குழு பரிசீலனை செய்ய வேண்டும்.

(2) விற்பனை மண்டலத்தில், விற்பனை பகுதி, நடைபாதை மற்றும் வண்டி பாதை ஆகியவற்றினை உள்ளாட்சி அமைப்பால் தெளிவாக தெளிவுபடுத்த வேண்டும்.

ஈ விற்பனை மண்டலத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தினை ஒழுங்குபடுத்துதல். - எந்த ஒரு விற்பனையாளரும், தயார் செய்யப்பட்ட அல்லது அந்த இடத்தில் தயாரித்து விற்பனை செய்யும் உணவு பொருட்கள் குறித்து உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில், மேற்படி சட்டத்தில்

12. குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலரால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் மற்றும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவால் அந்த சாலையோர வியாபாரியின் விற்பனை சான்றினை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.
13. விற்பனை மண்டலங்களில் குடிமை சேவைகளை ஒழுங்குப்படுத்துதல்,- (1) விற்பனை மண்டலங்களில், பொது கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்த வேண்டும்.
    i. உள்ளாட்சி அமைப்பால் திடக்கழிவுகளை சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்.
    ii. சாலையோர வியாபாரிகள் தனிநபர் தேவைக்கு மின் செரிவூட்டும் சாதனம் (rechargeable lamps) அல்லது சுயமாக மின் உற்பத்தி செய்யும் சாதனங்கள் உபயோக படுத்தல் வேண்டும்.
    iii. விற்பனை மண்டலங்களில் தனி நபர் மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கக் கூடாது.
    iv. மின்சார கம்பங்களிலிருந்து முறையற்ற மின் உபயோகத்தை தடுக்கப்படும்.

மேற்கண்ட சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள்(By-Law), 2018- மற்றும் பொது மக்களின் ஆட்சேபனை மற்றும் கருத்துரு பெறுவதற்கு ஏதேனும் தினசரி நாளிழில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண்.3998/2014/எப்1)

**தீர்மான எண்**: 1155
**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 22:-**

மனுதாரர் திருமதி. N. ஜெயலட்சுமி , க/பெ.P.S. நடராஜன் என்பவரால் தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட அல்லிநகரம் கிராமம் , பழைய சர்வே எண்கள். 1783, 1785 /2 , 1785 /3 , 1785 /4 , 1785 /5 , மற்றும் 1785 /6 , சர்வே வார்டு –D, பிளாக்-3 , நகரளவை எண்கள்.11/2 11 /3 ல் கட்டுப்பட்டுள்ள 7041.43 ச.மீ (1.74 ஏக்கர்) பரப்பளவுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை முறைப்படுத்துவதற்கு விண்ணப்பிக்கப்பட்டு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தேனி அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.140 / 2025 / தே.மா.2 , நாள்.15.09.2025 ன்படி பரிசீலிக்கப்பட்டு

மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு ம.வ. (மு) / ந.ஊ,உ.இ (தே.மா) எண்.15 /2025 என எண்ணிடப்பட்டு கொள்கை அளவிளான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது மனைப்பிரிவு விபரங்கள் கீழ்க்கண்டவாறு

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | 7041.43 ச.மீ(1.74 ஏக்கர்) |
| மனைப்பிரிவு சாலைகள் | 1048.71 ச.மீ |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | 28 எண்ணம் |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | 6 எண்ணம் (1592.34 ச.மீ) |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | 22 எண்ணம் (4371.50ச.மீ) |

மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகளை தானப்பத்திர ஆவணம் எண்.7536/2025, நாள்.30.08.2025 ன் படி மனுதாரரால் இந்நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.. மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலையினை இந்நகராட்சி சாலைபதிவேட்டில் பதிவேற்றம் செய்வதற்கும், விற்கப்படாத மனைகளை அரசாணை எண்.78 மற்றும் 172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் .04.05.2017 மற்றும் 13.10.2017 ன் படி உரிய கட்டணங்களை செலுத்தி மனைவரன்முறை செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம். (**ந.க.எண்**. 2676 /2025/எப் -1)
**தீர்மான எண்**: 1156
**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 23</u>:-**

மனுதாரர் திரு. S. நடராஜன் , த/பெ.சுப்பையன் செட்டியார் என்பவரால் தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட பழைய சர்வே எண்கள். 814/1, 815/1 மற்றும் 815/2 , சர்வே வார்டு – B, பிளாக்-3 , நகரளவை எண்கள்.4/3 மற்றும் 4 /6 ல் கட்டுப்பட்டுள்ள 9844.90 ச.மீ (2.41 ஏக்கர்) பரப்பளவுள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைப்பதற்கு விண்ணப்பிக்கப்பட்டு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தேனி அவர்களால் பரிசீலிக்கப்பட்டு ந.க.எண்.THENI / Q411BX61/2025 /TCP நாள்.04.10.2025 கடிதம் மூலம் மேற்படி மனைப்பிரிவிற்கு **LP/AD DTCP (TD) NO : SWP / 134 / 2025** என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.. மனைப்பிரிவு விபரங்கள் கீழ்க்கண்டவாறு

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | 9844.90 ச.மீ (2.41 ஏக்கர்) |
| உத்தேச சாலைகள் | 2228.63 ச.மீ |
| மீதமுள்ள மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | 7616.27 ச.மீ |
| உள்ளாட்சி உபயோகம் | 41.23 ச.மீ (0.54%) |
| தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழக உபயோகம் | 39.94 ச.மீ(0.52 %) |
| ஒதுக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | 49 எண்ணம் |

மேற்படி உத்தேச சாலைகள் மற்றும் உள்ளாட்சி உபயோகத்திற்கான இடங்கள் தானப்பத்திர ஆவணம் எண்.8663/2025, நாள்.03.10.2025 ன் படி மனுதாரர்களால் இந்நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழக உபயோகத்திற்கு (TANGEDCO) ற்கான இடம் தானப்பத்திர ஆவண எண்.8664/2025, நாள்.03.10.2025 ன் படி மனுதாரரால் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது . மனுதாரர் தனது சொந்த செலவில் சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் இதர அடிப்படை வசதிகள் மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துறையின் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டும், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி2, நாள்.20.10.2022 ன் படி நடவடிக்கை மேற்கொண்ட பின் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். (**ந.க.எண்**. 3607 /2025/எப் -**1)**

**தீர்மான எண்**: 1157

**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒம்).பா.ரேணுப்பிரியா,
நகர்மன்றத்தலைவர்,
தேனி-அல்லிநகரம் நகராட்சி.

// **உண்மை நகல்** //

ஆணையாளர்,
தேனி-அல்லிநகரம் நகராட்சி.